# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
# மேம்பாட்டுத் துறை

**மானியக் கோரிக்கை எண்.49**

**அறிவிப்புகள்**
**2013 -2014**

**முனைவர் வைகைச்செல்வன்**
பள்ளிக்கல்வி, விளையாட்டுகள்
மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர்

## 1. மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் சீரமைத்தல்

கடந்த 1995–ஆம் ஆண்டில் நடைபெற்ற 7–வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னர் மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2004–ஆம் ஆண்டு சேம்பியன் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளுக்காக இந்த ஆடுகளம் சீரமைக்கப்பட்டது. செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளத்தின் பயன்பாடு 7 முதல் 10 ஆண்டுகளாகும். ஆடுகளம் அமைக்கப்பட்ட நாள் முதலாக முழுமையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது ஆடுகளம் வழுக்கும் தன்மையுடையதாக உள்ளதால் விளையாட்டு வீரர்கள் பயிற்சி மேற்கொள்ள கடினமாக உள்ளது. வருங்காலங்களில் நடைபெறவுள்ள உள்ள பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை கருத்தில் கொண்டு தற்போதுள்ள செயற்கை இழை ஆடுகளத்தினை ரூ.3.5 கோடியில் சீரமைத்திட **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**2. அகில இந்திய குடிமைப் பணி விளையாட்டுப் போட்டிகள் மாதிரி மாநில அளவில் குடிமைப் பணி போட்டிகளை நடத்துதல் (8 விளையாட்டுக்கள் ஆண்கள் மற்றும் பெண்கள்)**

ஆண்டுதோறும் அகில இந்திய குடிமைப்பணி விளையாட்டுப் போட்டிகள் இந்திய அரசின் சார்பாக நடத்தப்பட்டு வருகின்றன. உடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வையும், விளையாட்டுக் கலாச்சாரத்தையும் அரசு ஊழியர்களிடையே உருவாக்கும் வகையில் மற்றும் தமிழ்நாடு சார்பாக கலந்து கொள்ளும் சிறந்த அணிகளை, அகில இந்திய குடிமைப்பணி விளையாட்டுப் போட்டிகளை நடத்திட **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** அகில இந்திய குடிமைப்பணி விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் மாநிலத்தில் உள்ள விளையாட்டு வசதிகளை இலவசமாகப் பயன்படுத்தலாம்.

## 3. மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக் கூட (GYM) வசதிகள் செய்தல்

மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதன் மூலம் நல்ல ஆரோக்யம் மற்றும் அனைவரது நலன்கள் மேம்படுத்துவதுடன் இளைஞர்கள், சிரார்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் சீரிய உடல்நலத்துடன், ஆரோக்கியமாக வாழ வழி வகுக்கும். அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக் கூட வசதிகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல் மற்றும் உடற்பயிற்சிக்கான தரமான உபகரணங்கள் வழங்குதல் போன்ற பணிகளுக்காக மாவட்டம் ஒன்றுக்கு ரூ.40 இலட்சம் தேவைப்படுகிறது. (கட்டமைப்பு வசதிகள் – ரூ.20 இலட்சம், உடற்பயிற்சி உபகரணங்கள் – ரூ.20 இலட்சம்). முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் உடற்பயிற்சி கூடம் மொத்தம் ரூ.4. கோடி மதிப்பீட்டில் அமைத்திட **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 4. விருதுநகர் மாவட்டத்தில் நீச்சல்குளம் கட்டுதல்

தற்போது, மாநிலத்தில் 21 நீச்சல் குளங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 4 நீச்சல் குளங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும், ஒரு திறந்த வெளி விளையாட்டரங்கம், ஒரு உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் விருதுநகர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.80.00 இலட்சம் செலவில் நீச்சல் குளம் ஒன்று கட்டுவதற்கு **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 5. விழுப்புரம் விளையாட்டரங்கில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளல்

விழுப்புரம் நகரின் மையப் பகுதியில் 14.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேலும், இவ்விளையாட்டரங்கை மேம்படுத்த கீழ்க்காணும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

1. மழைக்காலங்களில் நீர் தேங்குவதைத் தவிர்க்க வளாகத்திலுள்ள பள்ளமான பகுதி முழுவதையும் 0.60 செ.மீ அளவிற்கு உயர்த்துதல்
2. ஓடுபாதை வடிகால் வசதி ஏற்படுத்துதல் (580 சுற்றளவு)
3. வளாகத்தில் 250 சுற்றளவு நீளத்திற்குப் பாதுகாப்புச் சுவர் அமைத்தல்
4. வளாகத்திற்கு அணுகு பாதை அமைத்தல்

மேற்கண்ட பணிகள் ரூ.50.00 இலட்சம் செலவில் மேற்கொள்ள **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

## 6. திருநெல்வேலி மற்றும் திருச்சி உள் விளையாட்டரங்கில் மரத்தாலான தரைத்தள வசதி ஏற்படுத்துதல்

தற்போது, பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் சென்னை, தருமபுரி, கிருட்டிணகிரி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ளன. மேலும், திருவாரூர், திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை மற்றும் திருச்சி ஆகிய ஐந்து இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இந்த உள் விளையாட்டரங்கங்களில் இதர தரைத்தளங்களை விட மரத்தாலான தரைத் தளம் அமைப்பதால் அதிக ஆயுட்காலம், குறைவான பராமரிப்புச் செலவு, விளையாட்டுத்தரம் போன்ற கூடுதல் நன்மைகள் கிடைக்கின்றன. தற்காலத்தில் உள்ளரங்க விளையாட்டுக்கள் பெரும்பாலும் மரத்தாலான தரைதளத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு இணையாக விளையாட்டுத்திறனை மேம்படுத்த மரத்தாலான தரைத்தளம் மிகவும் அவசியமாகும். எனவே, திருநெல்வேலி மற்றும் திருச்சி உள் விளையாட்டரங்கங்களில் ரூ.57.50 இலட்சம் வீதம் ரூ.115.00 இலட்சம் செலவில் மரத்தாலான தரைத்தளம் அமைத்திட **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**7.குடிசைவாசிகளுக்கு விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல்**

குடிசைப்பகுதி மக்களின் புனரமைப்பிற்காக தென்சென்னையில் உள்ள ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் 31,912 குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது. இங்கு வசிக்கும் இளைஞர்களிடையே ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதி ஆகியவற்றை வளர்ப்பதற்கு அவர்களுக்கு விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தித் தருவது அவசியமாகிறது. இந்த குடிசைப்பகுதியில் அரசு விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும், கூடைப்பந்து, கையுந்துபந்து, கபாடி, டென்னிகாய்ட் ஆகிய விளையாட்டுக்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும், அதற்குத் தேவையான நிரந்தரம் மற்றும் நிரந்தரமல்லாத விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் ரூ.26.64 இலட்சம் செலவில் வழங்கவும் **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**8. என்.சி.சி. மாணவர்களுக்கு பயிற்சியளிப் பதற்காக பத்து சரிநுட்ப துப்பாக்கிகள் (Precision Rifles) வாங்குதல்**

இயக்குநரக தேசிய மாணவர் படைகளுக் கிடையேயான துப்பாக்கி சுடும் போட்டி ஒரு வருடாந்திர நிகழ்வு. இந்த நிகழ்வு மிகவும் போட்டி வாய்ந்ததாக இருப்பதனால், இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடம் முழுவதும் சரியான உபகரணங்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது அவசியமாகும். தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணவர்கள் தற்போது எடை அதிகம் கொண்ட 0.22 வகை துப்பாக்கிகளை பயன்படுத்துகின்றனர்.

இந்த ரக துப்பாக்கிகளின் மூலம் பயிற்சி பெறுவதால் துப்பாக்கி சுடும் போட்டிகளில் அவர்களால் திறம்பட செயல்பட இயலவில்லை. எனவே, மாணவர்களின் பயிற்சிக்காக ரூ.20.00 இலட்சம் செலவில் எடை குறைந்த சரி நுட்ப திறன்வாய்ந்த நவீனரக துப்பாக்கிகளை வாங்கிட **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**9. தமிழ்நாடு உடற் கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கூட உபகரணங்களுடன் கூடிய ஊடக சாதனவெளிப்பாட்டு வகுப்பறைகள் கட்டுதல்**

2005–ஆம் ஆண்டு இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதன்முதலாக உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப்பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர் களுக்கு நவீன மற்றும் சிறந்த வசதிகளை அளிக்கும் பொருட்டு விளையாட்டு உடல் இயக்கவியல் மற்றும் இயந்திரவியல் துறையில் ரூ.**36.88** இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுக்கூட உபகரணங்களுடன் கூடிய ஊடக சாதன வெளிப்பாட்டு வகுப்பறைகள் கட்டுவதற்கு **மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**முனைவர் வைகைச்செல்வன்**
பள்ளிக்கல்வி, விளையாட்டுகள்
மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர்